பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 26 ஜு. ஆகிர் 1 இதழ் 87

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9-5-78

UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED ... PERIODICALS

# அமைச்சரவையில் அடுத்தவாரம் மாற்றம்?

## லலித் புதிய நிதியமைச்சராகலாம்

[கொழும்பு]

அமைச்சரவையில் அடுத்த வாரம் மாற்றம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சுகாதார அமைச்சராகவிருக்கும் திரு காமினி ஜயசூரிய சபாநாயகராக நியமிக்கப்படலாமென்றும் சபாநாயகர் திரு. ஆனந்த திஸ டி. அல்விஸ் ராஜாங்க அமைச்சராக நியமனம் பெறலாமென்றும், நிதி அமைச்சர் திரு. றொனி டிமெல் கல்வி அமைச்சராகவும் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நிதி அமைச்சராகவும், உதவி வர்த்தக அமைச்சராகவிருக்கும் திரு. எம். எஸ். அமரசிறி வர்த்தக அமைச்சராகவும் நியமிக்கப்படலாமென்றும் அறியப்படுகிறது.

அமைச்சரவை மாற்றங்கள், அநேகமாக இம்மாதம் 12ம் திகதி அல்லது அடுத்தவார ஆரம்பத்தில் நிகழலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஈ)

# இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை விவகாரம்

# கொலைகாரர்கள்மீது வலைவீச்சு!

# எவரும் கைதாகவில்லை

(யாழ்ப்பாணம்)

**சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன், சுட்டுக்கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக உயர்மட்ட ரீதியில் விசாரணைகள், பரவலாகநடைபெற்று வருகின்றன. கொலைகாரர்களைக்கண்டுபிடிப்பதில் தீவிரமுயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டபோதிலும், நேற்று இரவுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.**



யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் கே. பத்மநாதன் சனிக்கிழமை இரவு இனந்தெரியாத இவரால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக பலர்விசாரணைக்குட்படுத்தப் பட்டபோதிலும் எவரும்நேற்று இரவுவரை கைதுசெய்யப்படவில்லை.

யாழ். பொலிஸ்அதிபர் திரு டக்ளஸ் ரண்முத்துகலவுடன் நேற்றிரவு "ஈழநாடு" தொடர்பு கொண்டபோது;

"யாழ்ப்பாணம் வந்திருந்த பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்காவிடம் இங்குள்ள நிலைமை பற்றி விரிவாகத் தாம் கூறியதாகவும் போதுமான வாகனங்களையும் மேற்கொண்டு சில பொலிஸாரையும் இங்கு அனுப்பிவைக்குமாறு தாம் கேட்டுக்கொண்டதாகவும்' கூறினார்.

'இதுவரை எந்தவித விசேஷ துப்பறியும் பிரிவுகளும் இங்கு வரவில்லை. போதுமான பொலிஸாரை எதிர்பார்த்திருக்கிறோம்'' என்றும் யாழ். பொலிஸ் அதிபர் குறிப்பிட்டார்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக நேற்றுவரை பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

## பாராளுமன்ற காரியதரிசிகள்

சென்னை, மே 8

தமிழ்நாட்டில் இன்று எட்டு பாராளுமன்றக் காரியதரிசிகள் நியமிக்கப்பட்டனர்.

கூட்டுறவுத்துறை, வருமான வரித்துறை, இந்து அறநிலை சட்டம், கல்வி, போக்குவரத்து சுகாதாரம், நிதி ஆகியதுறைகளுக்குப் பொறுப்பாக இந்தப் பாராளுமன்ற காரியதரிசிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாக திரு. நாஞ்சில் வின்ஸன்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

1953ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் இப்பொழுதுதான் பாராளுமன்றக் காரியதரிசிகள் மீண்டும் நியமிக்கப்படுகின்றனர்.

## ரூ. 50,000 நஷ்டஈடு கோரி இன்ஸ்பெக்டர் மீது வழக்கு

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஹெட்டி ஆரச்சி, சட்ட மாஅதிபதி ஆகியோருக்கு எதிராக 50,000 ரூபா நஷ்டஈடு கோரி வழக்கொன்று நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மரீ ஒருவர் காணாமல்போனதாக, சந்தேகத்தின்பேரில் மன்னார் பொலிசாரால் கைது செய்யப்பட்ட திரு. தர்மரத்தினம் கணபதிப்பிள்ளை விசாரணையின்போது பொலிசார் தமக்கு இம்சைவிளைவித்தமைக்காக நஷ்டஈடாக 50,000 ரூபா தரவேண்டுமென்றும் கோரியும் வேறு மூன்று தனிவழக்குகளும் தாக்கல்செய்யப்பட்டன.

திரு. தருமரத்தினம் கணபதிப்பிள்ளை என்ற சந்தேக நபரை மன்னார் பொலிசார்

[8-ம் பக்கம் பார்க்க]

# பொலிஸ்அதிபர் தலைமையில் நிகழ்ந்த இறுதி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதனின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 750 பொலிஸார் அணிவகுத்துச்சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

### பத்மநாதன் இல்லத்தில்

நேற்றுக்காலை, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்திற்கு பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள், சட்டத்தரணிகள் ஆகியோர் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

திருநெல்வேலியிலிருந்து செம்மணிவரை பொலிஸார் அணிவகுத்துச்சென்று தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

### மறைவுக்கு அஞ்சலி

சி. ஐ. டி பத்மநாதன்மறைவு குறித்து, நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையத்தில், கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கான்ஸ்டபிளாகவே பொலிஸ் இலாகாவில் சேர்ந்து படிப்படியாக முன்னேறி. யாழ் மாவட்ட விசேட துப்பு துலக்கும் பிரிவு இன்ஸ்பெக்டரானார்.

### இறுதி ஊர்வலம்

சரியாக 4 மணிக்கு இறுதி ஊர்வலம் புறப்பட்டது. இந்த ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

பொலிஸ் அதிபர் ரண்முத்துகல தலைமையில் பொலிஸார் அணிவகுத்து அஞ்சலி செலுத்தினர்.

### இரு தடவைகள் கார் சேதமானது

71ம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின் போது இன்ஸ்பெக்டர் பத்மநாதன். வறக்காப்பொல பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாக இருந்து பணியாற்றினார். அப்போது அவர் கார் சேதப்படுத்தப்பட்டது.

73ம் ஆண்டுஇவருக்குசிறந்த பொலிஸ் வீரருக்கான ஜனாதி

[8ம் பக்கம் பார்க்க]

# இறுதி மரியாதையாக 21 குண்டுகள் தீர்க்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதனது பூதவுடல் சகல பொலிஸ் மரியாதைகளுடனும் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது.

கல்வியங்காடு சந்தியிலிருந்து, பொலிஸ்-இராணுவம் 'பான்ட்' வாத்திய இசையுடன் அணிவகுத்துச் செல்ல இறுதி ஊர்வலம் ஆரம்பமானது. ஊர்வலத்தில் பொது மக்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

### மரியாதைக் குண்டுகள்

இறுதி ஊர்வலத்திற்கு வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகல தலைமைதாங்கிச் சென்றார். பூதவுடல், மயானத்தை அடைந்ததும் 3 தடவைகளில் 7 குண்டுகளாக, 21 குண்டுகள் தீர்க்கப்பட்டன. பொலிஸ் அணிவகுப்பில் குருநாகல். திருமலை அனுராதபுரம், வவுனியா, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை,

(8-ம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரிகள் நீதிபதிகள் கலந்துகொண்டனர்

(யாழ்ப்பாணம்)

இறுதி ஊர்வலத்தில், பல பொலிஸ் அதிகாரிகளுடன், நீதிபதிகளும் கலந்துகொண்டனர்.

வவுனியா பொலிஸ் அதிபர் சந்திரா வெண்டிஸ், அனுராதபுரம் பொலிஸ்அதிபர் திரு. சமரசிங்க, யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகல, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் சில்வா, யாழ் உதவி பொலிஸ் அதிபர்கள் திரு. ஆனந்தராஜா, திரு. வீரரட்ண, தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. பிரேரா. நீதிபதிகள் கே. வி. நவரெத்தினம், பாலகிட்ணர், எம். ஆசீர்வாதம் கெங்காதரன், ப்தில்நீதிபதி கே. கனகரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்

ஊர்வலம் மிக அமைதியாகச் சென்றது. (கா)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு (மேற்கு) அண்மையில் ஆடிய பாத றேட், இல. 169. காணி பரப்பு $1\frac{1}{2}$ கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: 169, ஆடியபாத வீதி, திருநெல்வேலி. 9264

விருடியோ ஒன்றுக்குரிய சகல புகைப்படக் கருவிகளும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு 38, முனீஸ்வரன் வீதி. யாழ்ப்பாணம். 9262


## வட்டாரக் கல்வியதிகாரி கோரிக்கை

(உடுப்பிட்டி)

மாதந்தோறும் பாடசாலைகளில் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டங்களை நடாத்திவர வேண்டுமென உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்களின் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார். (இ)

## 4 மாதங்களில் 450 கொலைகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் இவ்வாண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப் பகுதியில் 450 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கடந்த மாதத்தில் மட்டும் 146 பேர் கொலைசெய்யப்பட்டனரென்றும் அவர் கூறினார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற பொன்னையா தாமோதரம்பிள்ளை என்பவரது மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் மட்டுவில் வடக்கு பொன்னையா சங்கரப்பிள்ளை

மனுதார்

மரணசாதன ] இல. 185
நியாயாதிக்கம் )

எதிர்

மட்டுவில் வடக்கு பொன்னையா தாமோதரம்பிள்ளை கைம்பெண் வேலாம்பாள்

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1978 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

நீ. அருளப்பு
பதிவாளர்

1978 ஆண்டு வைகாசி மாதம் 2 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது, என்னால் எழுதப்பட்டது,

செ. இராமலிங்கம்
மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி. 9256

## வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவும், பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரிகள் பிரிவும் புதிய தேர்தற்தொகுதி அடிப்படையில் பிரிக்கப்படவுள்ளன.

இதனால் தற்போது உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரியின் கீழ்இயங்கும் பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள சில பாடசாலைகள் பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரியின் கீழும், பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரியின் கீழ் இயங்கும் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சில பாடசாலைகள் உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரியின் கீழும் இயங்கும். (இ)

## பிரதிநிதி தெரிவு

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. ச. இயக்குநர் சபைக்கு ஊழியர் பிரதிநிதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 14-ந் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி இத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளரும் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளரும் நேரடிப் போட்டியில் ஈடுபடுவர் எனத் தெரிகிறது. (உ)

## மத்தியகுழு தெரிவு

(நெல்லியடி)

பருத்தித்துறை தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகளின் மத்திய குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா முன்னிலையில் மத்திய குழு தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி தெரிவு பருத்தித்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்றது. (உ)

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.

## பதவி வெற்றிடங்கள்

**சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர்கள் தரம் 111**

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 24-5-78-ந் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சங்கத் தொழிற்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

வயது: 21 — 30

தராதரம்: 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண தரச்) சித்தியும், ஒரு வருட கால அனுபவமும்.

சம்பளம்: 180 — 320 / 8X10, 10X6

பொதுமுகாமையாளர்.
கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்,
1978-05-06. 9263


வடபகுதி மக்களுக்கு வழங்குகின்றோம்.

OMAX
QUALITY WATCHES

உலகப் புகழ் பெற்றவை, சுவிட்சர்லாந்தில் செய்யப்பட்டவை, கொடுக்கும் விலைக்கு ஏற்றவை, வண்ணங்கள் பல, வடிவங்கள் பல, வகைகள் பல, ஆண்கள், பெண்கள் - தனித்தனியாக - மின்னியக்கி, தன்னியக்கி, விசைதிரும்பிக் கைக்கடிகாரங்கள்.

375/- ரூபாயும், மேலேயும்.

**காந்தளகம்** 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 256

சுவர்க் கடிகாரங்கள், மின்னியக்கிக் கணிதமானிகள், BIGBEN, அலாரம் மேசை மணிக்கூடுகள், என்பனவும் உண்டு.

## மின்தறி ஆலையாளர்களே! புதிய மின்தறி ஆலை நிறுவ விருப்பவரே!

சர்வதேச உலகப்புகழ்பெற்ற யூட்டாஸ் (UTAS-EM/S) நெசவு ஆலையந்திரங்களை தெரிவுசெய்தால் நீங்கள் அடையும் நன்மைகள் :

- 20% முற்பணத்துடன் உங்களுக்கு தேவையான யந்திரங்களைப்பெற்று மீதிப் பணத்தை, யந்திர உற்பத்தி மூலம் ஒருவருடத்துள் கட்டிமுடிக்கலாம்.
- 80% நிலுவைப்பணத்துக்கு 3.5 வீத வட்டி அறவிடப்படும்.
- புரோ மோட்டர்ஸ்நிறுவனம் தொழில்நுட்ப ஆலோசனைகளையும், தொழிற்பயிற்சியையும், விற்பனைக்கு பிந்திய நேரடி சேவையையும் இலவசமாக வழங்குகின்றது.
- செக்கோசிலவாக்கிய யூட்டர்ஸ் மின்தறி தயாரிப்பாளருடைய நேரடிச் சேவை குறிப்பிட்ட காலத்திற்குக் கிடைக்கும்.
- யூட்டர்ஸ் மின்ஆலைகளின் உற்பத்தி, மற்றைய ஆலைகளின் உற்பத்திவல்லமையைவிட இருமடங்கு.
- உற்பத்தியின்போது ஓர் இழைதான் அறுந்தாலும் சுயமாக தன்னியக்கமாக தன்னை நிறுத்தும் சக்தி கொண்டது.
- இயங்கும்போது சத்தம் குறைவாக இருப்பதால் தொழிலாளரின் செவிப்புலனைப் பாதிக்காது.
- விபத்து ஏற்படும்போது எத்திசையில் இருந்தும் மின்தறியை உடனடியாக நிறுத்தும் சீரமைப்பு கொண்டது.
- உதிரிப்பாகங்களை தட்டுப்பாடின்றி சிறந்த தொழில்நுட்ப ஆலோசனையுடன் புரோ மோட்டர்ஸ் நிறுவனம்வழங்கும்.
- மேல்நாடுகளின் துணிகளுக்கு நிகராக சகல இன துணிகளையும் நெய்யலாம்.

இன்னும் பல பயனுள்ள பெறுபேறுகள்.

வர்த்தக விசாரணைகள் :

PEC

# புரோமோட்டர்ஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட்.,

(Pro-Motors ENGINEERING COMPANY LTD.)

844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu

## சமயமும் சமாதானமும்

பல சமயங்களும் பரஸ்பரம் ஒத்துழைப்பதின் மூலம் சமாதானத்தை நிலை நாட்டும் நல்ல நோக்கத்தைக்கொண்ட ஓர் உலக ஸ்தாபனத்தின் கிளை சென்ற வாரம் கொழும்பில் ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. பல சமயப் பெரியார்களும் இதில் கலந்துகொண்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

சமாதான நோக்கத்தைக் கொண்ட பல ஸ்தாபனங்கள் உலகில் உண்டு. ஆனால் கண்ட பலன் என்ன? சமாதானத்துக்குப் பதிலாக மக்கள் அமைதியை இழந்து வரவர அதிக அவதிப்படுவதுதான். இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்புதிய ஸ்தாபனத்தைக் கண்டு, மக்கள் அவநம்பிக்கை அடைவார்களாயின் அதில் வியப்பில்லை.

சமயங்கள் எல்லாம் அன்பையும் அமைதியையும் வற்புறுத்துகின்றனவெனினும், உலகில் பல கொடிய யுத்தங்களும் சமயங்களின் பெயராலேயே நடந்துள்ளனவென்பதை உலக சரித்திரத்தில் காணலாம். அப்படி இருக்கையில், சமயம் மூலம் சமாதானம் எப்படி ஏற்பட முடியும்?

சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் அநேகமாகப் பொதுவானவையே. என்றாலும் சமயங்களுக்கிடையே ஒற்றுமையோ ஒத்துழைப்போ உண்டா? இதற்கு மாறாக அவற்றிடையே போட்டிகளும் பொறாமைகளுமே அதிகமுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக உணவு, உடை முதலிய பல பிரச்னைகளும் ஊரில் பொது மக்கள் எல்லாருக்கும் உண்டு. பல சமய ஸ்தாபனங்களும் ஒத்துழைத்தால், இப்பிரச்னைகளைத் தீர்ப்பது அதிக எளிதாகும். ஆனால் சமயங்களே வேற்றுமைகளைக் கிளப்பினால் மக்களுக்குச் சங்கடங்கள் அதிகரிக்கவும், நிலைமை தலைவலி திருகுவலியாவதாகவும் இருக்கும்.

உலகில் சண்டைகள் கிளம்புவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மதமாற்றமென்றும் மதமாற்றங்களை நிறுத்தினால் சண்டைகள் வெகுவாகக் குறையுமென்றும், மகாத்மாகாந்தி கூறியுள்ளார். மதமாற்றங்கள் தாராளமாக அனுமதிக்கப்படும்வரை பல சமயங்களிடையேயும் நட்புறவோ, ஒத்துழைப்போ எப்படி ஏற்பட முடியும்? எல்லாச் சமயங்களும் ஒத்துழைத்தால் தான், மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். இன்று மக்களுக்கு மத நம்பிக்கை இல்லாமற்போவதன் காரணமும், சமய போட்டா போட்டிகளும் சமயத்தால் சமூகத்துக்கு எவ்வித நன்மையும் ஏற்படாததும் தான். கடுமையானவரை மதமாற்றங்களைத் தவிர்ப்பதுடன் மதங்களிடையே ஒத்துழைப்பை பலப்படுத்துவது, மக்கள் நன்மைக்கும், உலக அமைதிக்கும் மிக உதவியாக இருக்கும்.

"பாரபட்சமான போக்கு:

# தமிழ் மாணவர் கல்வி ஆற்றலை தடுக்க எந்த சக்தியாலும் முடியாது"

## தெல்லிப்பளையில் 'அமிர்'

[மாவிட்டபுரம்]

"கடந்த 6, 7 ஆண்டுகளாகத் தரப்படுத்தல் என்னும் கொடிய திட்டத்தின் கீழ், நமது தமிழ் மாணவர்களது உயர் கல்வி வாய்ப்புக்குத் தடை போடப்பட்டபோது அவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் இங்கு தடைபோடப்பட்டதும் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வியும், அதே நேரத்தில் தொழிலும் செய்து வருகின்றனர். ஆகவேதான் நமது இளைஞர்களது, மாணவர்களது கல்வி ஆற்றலை எவரும் தடுத்துவிட முடியாது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்."

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி வைரவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடந்த இவ்விழாவுக்கு முன்னதாகக் கல்லூரி வாயிலில் வைத்து திரு அமிர்தலிங்கமும் மற்றும் பிரமுகர்களும், மாணவ மாணவிகளது அணிவகுப்பு சகிதம் அழைத்துச் செல்லப்பட்டு, ஆலய வழிபாட்டையடுத்து திரு. அமிர்தலிங்கம் வைரவிழா நினைவு நிலையைத் திறந்து வைத்தார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு ரி. மாணிக்கவாசகர், அமரர் ஜெயரத்தினம் உருவ சிலையைத் திரைநீக்கஞ்செய்துவைத்தார். யாழ். வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் ஜெயரத்தினம் நினைவுகூடத்தைத் திறந்துவைத்தார்.

### சான்றோன் என்பதில் பெருமை

இவ்வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழினம் பாரம்பரியமாகவே அறிவைத் தெய்வமாகப் போற்றி வளர்த்து வந்துள்ளது வேறு இனங்கள், வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தபோது, நமது இனம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. தன் பிள்ளை வீரன் என்பதிலும் பார்க்க, சான்றோன் எனக் கேட்பதிலேயே தமிழ்த்தாய் பெருமைப்பட்டாள். அந்நிய ஆதிக்கத்திலேயே நமது மக்களது வளம் குன்றி, கல்வி வசதிகளற்றபோது மிஷனரிமார் கைகொடுத்தனர். கல்வி, கேள்விகளில் சிறந்தபடியால் நமது மக்கள் இங்கு மட்டுமல்ல வேறு நாடுகளிலும் தொழில் புரிய வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் சொந்த நாட்டில் அவர்களுக்குக் கல்வி சம்பந்தமான உரிமைகள் மறுக்கப்பட்டன. தரப்படுத்தல் என்னும் கொடிய திட்டம் இன்று நீக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் பல்கலைக்கழக அனுமதியின் போதுதான் உண்மை நிலை தெரியும்.

"யாழ். பல்கலைக்கழக வளாகம் பூரணத்துவமான பல்கலைக்கழகமாக மாறவிருப்பது பரந்துபட்ட தமிழினம் பெருமைப்படக்கூடியதாகும். இங்கு தமிழ்மொழி மூலம் சகல கலைகளையும் கற்கக்கூடிய வசதியேற்படும்" என்றார்.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில், அமரர் ஜெயரத்தினம் ஆற்றிய சேவைகளை எடுத்துக் கூறினார்.

கலாநிதி வித்தியானந்தன், இளைப்பாறிய அதிபர் வ. இருஷ்ணபிள்ளை, திரு. து. தருமராசா உட்படப் பலர் உரையாற்றினர்.

ஜெயரத்தினம் உருவச்சிலையைச் செதுக்கிய சிற்பி திரு. செ. சிவப்பிரகாசம் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டார் (உ)

# சகல இன மக்களும் சமமாக வாழ வேண்டும்

## இதுவே அரசின் கொள்கை என்கிறார் பிரதமர்

[வெள்ளவத்தை]

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் சரிசமமாக வாழ வேண்டும் என்பதே எமது அரசின் அடிப்படைக் கொள்கையாகும். அதனை செயல்படுத்துவதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையிலுள்ள பாத்திமா முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தின் 'பல்லாக்கு லெப்பை' மண்டபத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில் பிரதமர் திரு ஆர். பிரேமதாஸ குறிப்பிட்டார். பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது அரசு சமுதாயத்தில் புதிய மாற்றத்தை தார்மீக முறையில் ஏற்படுத்த முனைந்துள்ளது சமுதாமாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர் போதிய ஒத்துழைப்புகளை நல்க வேண்டும்.

நம்மத்தியிலே வாழும் வசதி படைத்த பெருமக்கள் அவற்றை சமூக முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் நல்ல பல தரும காரியங்களை செய்ய முன்வரவேண்டும்.

பாடசாலை கட்டிடங்களை கட்டித்தருபவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் ஏழைப் பிள்ளைகளின் நன்மைகருதி பாடசாலை கட்டிடங்களை கட்டித்தருமாறு வசதி படைத்தவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமரும், ஏனைய விழாவிற்கு வருகைதந்த பிரமுகர்களும் வித்தியாலய மாணவிகளின் பாண்டு வாத்தியக் கோஷ்டியின் இசையுடன் வரவேற்கப்பட்டனர்.

# "தொகுதி தோறும் அபிவிருத்தித்திட்டங்கள்"

## பிரதமர் அறிவிப்பு

(மாத்தறை)

"தேர்தல் தொகுதிகள் தோறும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படும். இதற்கு பொதுமக்களின் நேரடி ஒத்துழைப்பும் நாடப்படும்", என்று பிரதமந்திரி திரு. ஆர். பிரேமதாஸ கூறினார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு சொன்னார்.

"இயந்திர சக்தியிலும் பார்க்க மனித சக்திக்கே முதலிடம் அளிக்கப்படும்" என்றும் அவர் சொன்னார். (உ)

## மீண்டும் தவணைப் பரீட்சை

(உடுப்பிட்டி)

பாடசாலைகளில் மீண்டும் தவணைப் பரீட்சை முறையை அமுல்செய்யக் கல்வியமைச்சு முடிவுசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் கடந்த அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரை காலமும் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த அரையாண்டுப் பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் தவணைப் பரீட்சை நடாத்தப்படும்.

## மணிவாக்கு

மனிதன் திருந்துவது எண்ணத்தால். படகை சுக்கான் திருப்புவது போல, செயலைத் திருப்புவது எண்ணம்.

—டால்ஸ்டாய்.

## வங்கிக் கிளைகள்

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டித் தொகுதி மக்களினதும், வர்த்தகர்களினதும் நலன்கருதி நெல்லியடியில் இலங்கை வங்கிக்கிளையொன்று விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. பருத்தித்துறையில் மக்கள்வங்கிக் கிளையொன்றும் திறந்துவைக்கப்படவுள்ளது. [இ]

## கோண்டாவில் சிவகாமி அம்பாள் மஹோற்சவம்

[கோண்டாவில்]

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 13ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும், அடுத்த நாள் திங்கள் தீர்த்தோற்சவமும் நிகழும்.

24ம் தேதி பகல் அன்னதானமும் இரவு பூங்காவனமும் நடைபெறவிருக்கிறது 26ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வயிரவர் பொங்கல் மடை நடைபெறும்.

## நிரந்தர அதிபர் வேண்டும்

[வட்டுக்கோட்டை]

சென்ற நான்கு வருடகாலமாக காரைநகர் இந்துக் கல்லூரிக்கு நிரந்தரமான அதிபர் எவரும் நியமிக்கப்படாமலேயே இருந்து வருகின்றது. நிரந்தரமான அதிபர் ஒருவரை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் தா. திருநாவுக்கரசுவிடம் பலர் கேட்டுள்ளனர்.

......

## கல்வி அமைச்சர் யாழ். வருகிறார்

[உடுப்பிட்டி]

கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன எதிர்வரும் 19ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவுள்ளார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் கலந்துகொள்ளும்முகமாகவே கல்வி அமைச்சர் இங்கு விஜயம் செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ]

## அமிரையும் அழைப்பர்

[யாழ்ப்பாணம்]

செந்தமிழர் இயக்கத்தின் ஏழாலைக்கிளையினர் எதிர்வரும் 21ம் திகதி பொதுக் கூட்டம் ஒன்றினை பெரிய அளவில் நடத்த உள்ளனர்.

இக் கூட்டத்திற்கு எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தையும் அழைக்கவுள்ளதாக கிளைப்பிரமுகர் திரு. இரத்தினம் லஷ்மிகாந்தன் தெரிவித்தார். [உ]

## "சமூகத்திற்கும் நாட்டுக்கும் உத்தியோகம் பயன்தரவேண்டும்"

(உடுப்பிட்டி)

"நாம் உத்தியோகம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. நாம் ஆற்றும்பணி சமூகத்திற்கும், நாட்டிற்கும் பெரும் பயனளிக்கக்கூடியதாக அமைந்தாலே பெருமை பெறலாம். எந்தவொரு உத்தியோகத்தரும் இளைப்பாறியே ஆகவேண்டும். ஆனால் இளைப்பாறும் போது அவர் ஆற்றியசேவைகளும், பொதுமக்களின் ஏகோபித்த அன்பும் என்றும் நிலைத்து வாழும். இப்பகுதி விவசாயிகளின் முன்னேற்றத்தில் பங்குகொள்ள எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நான் பெருமிதமடைகின்றேன்."

இவ்வாறு புலோலி கமத்தொழிற்சேவைகள், பெரும்பாக அலுவலராகவும், புலோலி கமத்தொழிற்சேவைகள் குழுவின் தலைவராகவும் பணி புரிந்து ஓய்வுபெற்ற திரு. கே. இரத்தினசாமி ஊழியர்களால் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் கூறினார்.

திரு. கே. இரத்தினசாமி தொடர்ந்து பேசுகையில், "கமத்தொழிற்சேவை நிலையத்தின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். ஊழியர்கள் தமதுபணியை நன்குணர்ந்து செயற்படுவதின் மூலம் விவசாயிகளுக்கு உதவ முடியும்" என்றார்.

புலோலி கமத்தொழிற்சேவை நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். வி. சூசைராசா பேசும்போது: 'இப்பகுதி விவசாயிகளின் குறைபாடுகளைப் போக்கி அவர்களுக்கு உதவுவதில் முன்னின்று உழைத்தும், ஆர்வம் காட்டியும் வந்த திரு. இரத்தினசாமியை இப்பகுதி விவசாயிகள் என்றும் மறக்கமாட்டார்கள். தன்கீழ் பணி புரிந்த ஊழியர்களைத் தமது பிள்ளைகளைப்போன்று அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர்" என்று கூறினார்.

மற்றும் திரு. எஸ். கே. ஜெயக்குமார், திரு. ரி. சண்முகசீலன், திரு. சு. ஞானப்பிரகாசம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஐயாத்துரை ஆகியோரும் பேசினர்.

## தமிழக-ஈழ கலை; கலாச்சார தொடர்பு என்றும் அழியாது

### யாழ். வளாக தமிழ் விழாவில் 'சொக்கன்'

[யாழ்ப்பாணம்]

'தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்கும் இடையிலான கலை கலாச்சாரம், பண்பாட்டுத் தொடர்புகள் காலத்தால் அழியாதவை. திருக்குறள் இலப்பதிகாரம் உள்ளவரை தமிழகத்தோடு உள்ள தொடர்பு அழியாது.'

இவ்வாறு நேற்றுமுன்தினம் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தில் தமிழ் மன்றத்தினரால் நடத்தப்பட்ட தமிழ் விழாவில் பிரபல எழுத்தாளரும் கவிஞருமான திரு. சொக்கன் கூறினார்.

"இந்திய தமிழ்சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியும்" என்ற பொருள்பற்றி யாழ். வளாகத் தமிழ்துறைப் பேராசிரியர் திரு. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே திரு. சொக்கன் மேற்கண்டவாறு கூறினார்.

அவ தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

வாசகர்கள் பல்வேறுபட்ட ரசனை உடையவர்களாக உள்ளனர். இவர்களது வாசிப்பு ரசனைக்கு ஏற்றவகையில் இந்திய சஞ்சிகைகள் பெரிதும் அமைந்திருப்பதே அச் சஞ்சிகைகள் பெருமளவில் இங்கு விற்பனையாவதற்குக் காரணமாகும்.

இங்கு கூறப்பட்ட கருத்துக்களின்படி இந்தியப்பத்திரிகைகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்திய முதலாளிகளின் வெறுப்பைப் பெற்றுக் கொண்டால் நாலரை கோடி இந்திய தமிழ் மக்களின் வெறுப்புக்கும் அதிருப்திக்கும் நாம் ஆளாக வேண்டிவரும் என்ற கூற்றை எவருமே ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தியாவில் வெளியிடப்படுகின்ற பல சஞ்சிகைகள் இந்தியாவிலேயே விற்பனையின்றி இருப்பதைப் பார்க்கின்ற போது கலைவரட்சி இலக்கிய குணிகம் ஒரு போது இயல்பு என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஈழத்து இலக்கியப் பத்திரிகைகள் தமக்கெனச் சில இலக்கியச் சித்தாந்தங்களைக் கொண்டிருப்பதால் இவை இந்திய பத்திரிகைகளோடு வியாபாரத்தில் போட்டி போட முடியாதிருக்கின்றன.

இந்திய இலக்கியங்கள் இலங்கையில் கட்டுப்பாடற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்ட போது தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒரு காலகட்டத்தில் 1000 பிரதிகள் விற்கப்பட்ட சிரித்திரன் பத்திரிகை இன்று 400ஆக விற்பனை குறைந்துள்ளது. இது எதனால் ஏற்பட்டதென்பதை நாம் நன்கறிவோம்.

### இந்திய எழுத்தாளர் சகலரும்......

இந்திய பத்திரிகையாளர்கள் அனைவரும் சிறந்த எழுத்தாளர்கள் என நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மைக்காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த 'இதயம்' ஆசிரியரான மணியனின் இலங்கைப்பயணக் கட்டுரையில் தந்தை செல்வாவைச் சிங்களவர் என்றும், இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக இந்துகலாச்சார பீடத் தலைவர் பற்றியும், இலங்கையின் பல இடங்களின் பெயர்களைப்பற்றியும் தவறுதலான கருத்துக்களைத் தந்திருக்கிறார். இப்படி நாமறிந்த நமது இலங்கை வரலாற்றிலேயே இத்தகைய பல தவறுகள் என்றால் இவர் உலகப் பயணத்தின் போது நமக்கு எடுத்துச் சொல்லுகின்றவற்றில் எத்தனை தவறுகள் இருக்குமோ என எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நிலையில் இந்தியாவில் பத்திரிகைகள் அதிக விற்பனையாவதற்குக் காரணம் என்ன என கருத்திற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. அதிக பிரதிகள் விற்பனையாகின்ற குமுதத்தைப்பாருங்கள், நல்ல காட்டுன் படங்கள், கேள்வி-பதில் அம்சங்கள், சில துணுக்குகள், நான்கு பக்கங்களில் கடுகுச் செய்திகள், சிறு கதைகள் போன்ற பல்வேறு சுவையான அம்சங்கள் போன்ற வாசகர்களின் ரசனைக்கு ஏற்ற பல அம்சங்கள் இருப்பதே இதன் விற்பனைக்குக் காரணமாகும். இத்தகைய வாசகர்களைக் கவரத்தக்க அம்சங்கள் எமது சஞ்சிகைகளில் காணப்படாததே, எமது சஞ்சிகைகளின் விற்பனைக் குறைவுக்குக் காலாகின்றது.

எனவே தேவைக்கேற்றவாறு எமது சஞ்சிகைகளின் அட்டைகளைப் பலிச்சிடும் பல வர்ணங்களில் அச்சிட்டு, பல சிறப்பம்சங்களைப் புகுத்தி இலக்கிய ஆக்கங்களில் புதுமையைப் படைக்கவேண்டும்.

(கா-இ)

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

தேசிய லொத்தர் சபைத் தலைமைக்காரியாலயத்தில் அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட 661வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

**43 L 0139**

ரூபா 100,000/-

இரண்டாம் பரிசு:

**14 Z 0583**

ரூபா 40,000/-

மூன்றும் பரிசு

**60 J 0603**

ரூபா 10,000/-

தலா 1,389 ரூபாகொண்ட ஆறுதல் பரிசுபெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 04 A 0515 | 12 A 0106 |
| 19 A 0104 | 28 A 0196 |
| 45 A 0508 | 49 A 0323 |
| 53 A 0959 | 59 A 0250 |
| 03 B 0443 | 03 B 0781 |
| 12 B 0648 | 17 B 0094 |
| 27 B 0300 | 34 B 0002 |
| 40 B 0732 | 59 B 0685 |
| 10 C 0746 | 18 C 0106 |
| 57 C 0689 | 11 D 0573 |
| 30 D 0394 | 53 D 0859 |
| 26 E 0553 | 27 E 0549 |
| 33 E 0423 | 31 F 0238 |
| 43 F 0886 | 48 F 0153 |

| | |
|---|---|
| 49 F 0112 | 10 G 0390 |
| 30 G 0886 | 49 G 0793 |
| 11 H 0455 | 26 H 0318 |
| 41 H 0135 | 10 J 0299 |
| 16 J 0826 | 29 J 0105 |
| 35 J 0617 | 38 J 0803 |
| 43 J 0182 | 54 J 0081 |
| 52 J 0949 | 59 J 0859 |
| 01 K 0728 | 26 K 0641 |
| 30 K 0800 | 40 K 0712 |
| 55 K 0453 | 09 L 0569 |
| 20 L 0386 | 27 L 0072 |
| 36 L 0140 | 62 L 0062 |
| 08 M 0468 | 17 M 0207 |
| 30 M 0057 | 38 M 0257 |
| 39 M 0306 | 46 M 0766 |
| 51 M 0766 | 19 N 0710 |
| 20 N 0084 | 34 N 0100 |
| 41 N 0605 | 49 N 0124 |
| 57 N 0370 | 14 O 0168 |
| 32 O 0507 | 25 P 0014 |
| 32 P 0297 | 33 P 0806 |
| 34 P 0324 | 36 P 0096 |
| 56 P 0044 | 28 Q 0329 |
| 61 Q 0048 | 15 R 0913 |
| 22 R 0869 | 24 R 0604 |
| 37 R 0930 | 48 R 0963 |
| 21 S 0878 | 31 S 0014 |
| 30 U 0172 | 51 U 0107 |
| 05 V 0073 | 27 V 0777 |
| 29 V 0090 | 11 W 0917 |
| 23 W 0857 | 58 W 0361 |
| 18 X 0165 | 26 X 0600 |
| 40 X 0135 | 14 Y 0282 |
| 40 Y 0670 | 55 Y 0981 |
| 03 Z 0940 | 38 Z 0811 |

## யாழ். மாவட்டத்தில் பாண் — 74 சதம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம் 6ந் தேதி முதல் ஒரு றாத்தல் மாவின் விலை 72 சதமாகவும், ஒரு றாத்தல் பாணின் விலை 74 சதமாகவும் கூட்டப்பட்டுள்ளது.

இத்தகவலை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஆனந்தன் தெரிவித்தார்.

மாவின் விலை 12 சதமாகவும், பாணின் விலை 10 சதமாகவும் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த விலை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

முன்னர் ஒரு றாத்தல் மா 62 சதமாகவும், ஒரு றாத்தல் பாண் 64 சதமாகவும் விற்பனை செய்யப்பட்டது.

## தோட்டத் தொழிலாளருக்கு 30 ஆயிரம் வீடுகள் விரைவில் அமைக்கப்படும்

[கொழும்பு]

தோட்டத் தொழிலாளர்களின் இருப்பிட வசதியை சீரமைக்கும் நோக்குடன் அரசாங்கம் அவர்களுக்கென 30 ஆயிரம் சிறிய வீடுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

அரசு சுவீகரித்த தோட்டங்களில் தொழிலாளர்களுக்கே இவ்வீடுகள் ஐந்து ஆண்டுத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

தோட்டத்தொழிலாளருக்கு கல்வி, வைத்தியவசதிகளுடன் இருப்பிடவசதிகளையும் அதிகரிப்பதன் மூலம் தோட்டங்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்கே அரசு திட்டமிட்டுள்ளது என்று தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. பிராட்மன் வீரக்கோன் கூறினார்.

## எதிரி வரவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண வர்த்தகரான வேலுப்பிள்ளையிடம் 20 ரூபா கப்பம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியான பொலிஸ் கான்ஸ்டபிள் மைக்கல், நீதிமன்றத்திற்கு நேற்று வராததால் வழக்கும் பின்போடப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. வி. நவரத்தினத்தின் முன் கூப்பிட்டபோது எதிரி ஆஜராகவில்லை. கடந்த தவணையின் போது எதிரிக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

## திருக்கேதீஸ்வர வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

திருக்கேதீஸ்வர ஆலய இரண்டாவது ஆண்டு உற்சவம் இம்மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 20ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் வைகாசி விசாகத் தினத்தன்று தீர்த்தோற்சவமும் 17ம் திகதி பிச்சாடனர் உற்சவமும் இடம்பெறும். [இ]

## தரமான இந்திய நூல்களையே நாம் வாசிக்கவேண்டும்

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து பலதரப்பட்ட சஞ்சிகைகள் இறக்குமதி செய்தாலும் அவற்றில் தரமான நூல்களையே நாம் வாசிக்கவேண்டும்.''

இவ்வாறு யாழ் வளாகத் தமிழ்மன்றத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ்விழாவின் இரண்டாம் நாளன்று இடம்பெற்ற "கட்டுப்பாடற்ற இறக்குமதி ஈழத்து இலக்கிய வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றது'' என்ற ஆய்வரங்குக்கு தலைமைதாங்கியுரையாற்றிய வளாகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சண்முகதாஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

"இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியால் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்ற கருத்தில் பலதரப்பட்ட எழுத்தாளர்களிடையே பல்வேறுபட்ட கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரையில் இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியை திருப்பாற்கடலுக்கு ஒப்பிடலாம். திருப்பாற்கடலைக் கடைந்தபோது அமுதும் நஞ்சும் உருவாகின. தேவர்கள் அமுதினையே உண்டனர். அதேபோல இந்திய சஞ்சிகைகள் பலதரப்பட்ட, பல்வேறுப்பட்ட பலரகங்களைக் கொண்டவைகளாக இறக்குமதிசெய்யப்பட்டாலும் தரமான பத்திரிகைகளை மாத்திரமே நாம் படிக்கவேண்டும்.

அடுத்து உரையாற்றிய நாவலாசிரியர் செங்கையாழியன் தமதுரையில் கூறியதாவது:-

"இந்தியப் பத்திரிகைகளின் அரிய சந்தையாக இலங்கை இருந்திருக்கிறது. நாம் எமது ஆக்கங்களை இந்தியாவில் பிரசுரிக்கவேண்டுமென்று கேட்கவில்லை. நாம் விரும்புவதெல்லாம் எமது இலக்கிய ஆக்கத்திற்கு இவற்றால் தடை ஏற்படக்கூடாது என்பதுதான்.

இலங்கையின் இலக்கிய வளர்ச்சியை நாம் மூன்று கால கட்டமாக பிரிக்கலாம். 1971 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட கட்டுப்பாடற்ற இறக்குமதி, 1971 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட இறக்குமதி தடை செய்யப்பட்ட காலப் பகுதி, மூன்றாவது காலகட்டம் 1977க்குப் பின்னர் இறக்குமதி தளர்த்தப்பட்ட வேளை.

1971 ஆம் ஆண்டிற்குமுன் ஈழத்தில் பல படைப்புகள் வெளிவந்தன. ஆயினும் 71-ம் ஆண்டிற்குப் பிற்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் காலகட்டத்திலேயே தரமான நாவல்கள் எழுந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்திய சஞ்சிகைகளின் போட்டியும் இறக்குமதியுமே எமது இலக்கிய வளர்ச்சியை பாதித்தது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

கோவை மகேசன் பேசுகை பேசுகையில், இன எழுச்சிக்காக குரல் கொடுத்தவர்கள் இந்தியத் தமிழர்களே, எனவே எம்மைப் பொறுத்தவரை தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழர்கள் தான். எனவே இந்திய இலக்கியங்கள் ஈழத்து இலக்கியங்களைப் பாதிக்கின்றன என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

நமது வாசகர்கள் தரம் பிரித்துப் பார்ப்பதிலும் தகுதியானவற்றைப் படிப்பதிலும் திறமை மிக்கவர்கள். எனவே எந்த நாட்டுப் படைப்புகள் என்றாலும் அதன் தரத்தை அறிந்து வாசிக்கத் தமிழ்வாசகர்கள் தயாராக உள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

[கா இ]

வெள்ளை அறிக்கை
# உரிய காலத்தில் தமிழில்வெளியிடப்படவில்லை
## பாலாதம்பு கண்டனம்

(வெள்ளவத்தை)

தொழிலுறவு சட்டவெள்ளை அறிக்கையினால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். தொழில் அமைச்சு வெளியிட்ட வெள்ளை அறிக்கைதமிழ் மொழியில் உரியகாலத்தில் வெளியிடப்படாதது தவறான தாகும்.

இவ்வாறு இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பொதுச்செயலாளர் திரு. பலாதம்பு கொழும்பு வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தொழிலுறவு சட்ட வெள்ளை அறிக்கையைக் கண்டித்து நடைபெற்ற கூட்டத்தில் திரு பலாதம்புமேலும் பேசுகையில் கூறியதாவது:

"வெள்ளையறிக்கையால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விபரமாக அறிந்துகொள்ள தமிழ்த் தொழிலாளர்களுக்குப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. காரணம் வெள்ளையறிக்கை தமிழில் குறித்த காலத்தில் வெளியிடப்படாதது தான்.

"தோட்டப்பகுதிகளில் வாழும் தமிழ்த்தொழிலாளர்களுக்குத் தமிழ்மொழி மாத்திரமே தெரியும். அப்படியிருக்க சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளிவந்த இவ்வெள்ளையறிக்கை உரியகாலத்தில் தமிழில்வெளியிடப்படவில்லை.

இந்தத் தொழிலாளருக்கும் பாதகமான வெள்ளை அறிக்கையைப் பற்றி கருத்துத்தெரிவிக்க அரசாங்கம் வழங்கியிருந்த காலம் மார்ச் 15ம் திகதியோடு முடிவடைந்துவிட்டது. அதற்கு முன் இதனை நாம் தமிழில் வெளியிடுமாறு அரசாங்கத்தை கேட்டிருந்தோம்.

ஆனால் காலக்கெடு முடிந்த பத்து நாட்களுக்குப் பின்னர்தான் தமிழில் வெள்ளை அறிக்கை வெளிவந்துள்ளது. தொழிற்சங்கங்கள் வேறுபாடுகளை மறந்து இவ்வெள்ளை அறிக்கையை வன்மையாக எதிர்க்கின்றன. (இ)

3 லட்சம் ரூபா கடன்

# வசூலிக்கத் தவறினால்
## முகாமையாளர் மீது நடவடிக்கை!

[வட்டுக்கோட்டை]

காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் முன்னைய நிர்வாகத்தின்போது முறைகேடாக வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கடன்தொகையான மூன்றுலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாவை மீளப் பெற்றுக்கொள்ள இச்சங்க பொதுமுகாமையாளருக்கு ஒருமாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அவர்மீது ஒழுங்குநடவடிக்கை எடுப்பதென அண்மையில் நடந்த இயக்குநர்சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(7ம் பக்கம் பார்க்க)

# சங்கச் செய்திகள்

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் கா. வைத்தியநாதஐயர் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பிரம்மஸ்ரீ வைத்தியநாதஐயர்(அதிபர்), உப தலைவர்கள்: அ. தம்பிராசா, மா. இராஜேந்திரம், காரியதரிசி: க. கமலசேகரம், உப காரியதரிசி: செல்வி ஆ இராஜேஸ்வரி, தனதிகாரி: வீ இராசதுரை.

செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பதுபேர் தெரிவாகினர்.

## தேசிய சேமிப்பு வங்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கிஊழியர்களின் நலன்புரிசங்க வருடாந்த பொதுக்கூட்டம் வங்கி உதவிமுகாமையாளர் திரு எஸ். பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எம். நல்லையா, உப தலைவர்: கே. சுந்தரலிங்கம், இணைக்காரியதரிசிகள்: செல்வி புவனேஸ்வரி பொன்னுத்துரை எஸ். மரியதாஸ் தனதிகாரி: எம். பரமானந்தம், செயற்குழு உறுப்பினர்கள்: க.கமலசேகரம், எம். எஸ். எம். ஜமான், எஸ் யோகேஸ்வரன் கணக்குப்பரிசோதகர்கள்: எஸ் சிவராசா, பீ. சச்சிதானந்தம்.

## பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சு. கதிர்காமத்தம்பி(அதிபர்); உபதலைவர்: வே. ஆறுமுகம், செயலாளர்: ச. இராமலிங்கம், உபசெயலாளர்: ஐ. தியாகராசா, பொருளாளர்: செல்வி நி. எலிசபெத்.

செயற்குழு உறுப்பினர்கள் ஏழுபேர்.

## இயக்குநர் சபை

(சரணவாய்)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் பருத்தித்துறை எம். பி. திரு கே துரைரத்தினத்தின் சிபார்சின்பேரில் நியமிக்கப்பட்டுள்ளனர். வீ வேலும்மயிலும் (தலைவர்), எம் செல்வராசா, எஸ். சுப்பிரமணியம், எம். குணசீலன், கே எஸ்.முத்தையா, கே. பொன்னம்பலம், எஸ். கணேசமூர்த்தி, எஸ் குமாரசாமி, வீ நமசிவாயம்.

## மத்தியகொழும்பு இந்துபரிபாலனசபை

(வெள்ளவத்தை)

மத்தியகொழும்பு இந்துபரிபாலனசபையின் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: எஸ்.என். துரைராசா. செயலாளர்: ஆர். பீ. சிவலிங்கம், பொருளாளர்: எம். அந்தோனி, ஆலோசகர்: வீ. எஸ். பெரியசாமி, வெளிஉறவு காரியதரிசி: கே. பெருமாள், கணக்குப்பரிசோதகர்: இ. சனேந்திரன்.

ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாக தமிழ், சைவ வகுப்புகளை நடத்துவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு தலைவர் எஸ். என் துரைராசா பொறுப்பாகஇருப்பார் என முடிவுசெய்யப்பட்டது. (அ)

## இந்து இளைஞர் மன்றம்

(உடுப்பிட்டி)

நெல்லியடி இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: க. சந்திரகுமார், உபதலைவர்: ப. குமார், செயலாளர்: பி தயாபரன், பொருளாளர்: இ. ரவீந்திரன், உப பொருளாளர்: கு. ரகுநாதன், கூட்டுப்பிரார்த்தனைக் குழுப்பொறுப்பாளர்கள்: இ. ஜெயச்சந்திரன், செ. சிவச்சந்திரன்.

ஐவரடங்கிய செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## கலைப்பிரியா இசைமன்றம்

[கொழும்பு]

கொழும்பு கலைப்பிரியா இசைமன்றத்தின் 5-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: ஏ எம். சந்திரசேகரம், தலைவர்: திருமதி ராஜராஜேஸ்வரி சந்திரசேகரம், உபதலைவர்கள்: செல்விகள் ஞானசரஸ்வதி செல்லத்தம்பி, ரஞ்சிதமலர் சச்சிதானந்தம், செயலாளர்: செல்வி சந்திரகௌரி கனகரத்தினம், உப செயலாளர். செல்வி கல்யாணி நாயகி வைத்திலிங்கம், பொருளாளர்: செல்வி ரஜினி மாலிகா சமணி, உபபொருளாளர்: செல்வி சசிகலா சண்முகசுந்தரம். செயற்குழு உறுப்பினராக ஒன்பது பேர் தெரிவாகினர்.

## சைவ வாலிபர் சங்க ச. ச. நிலையம்

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்கசனசமூகநிலைய 24வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்: வ. தவராசா, உப தலைவர்: இ. மனோகரன், இணைச்செயலாளர்: விமலாம்பிகையாகன், தனதிகாரி: செ. மகேந்திரன், விளையாட்டுச் செயலாளர்கள்: செ. கணேசலிங்கம், அ. சிவசுரலிங்கம். மற்றும் ஏழு பேர் செயற்குழு உறுப்பினர். (கெ)

## பழையமாணவர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி பழையமாணவர்சங்க நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள்:

தலைவர்: எஸ். கனகராசா, உபதலைவர்கள்: என். எஸ்.கந்தையா, என். இலலிங்கம், எஸ். தம்பிராசா, செயலாளர்கள்: ஐ. ஜெகநாதன், எஸ். சுப்பிரமணியம், பொருளாளர்: பெர ஜெகநாதன், கணக்குப்பரிசோதகர்கள்: எஸ். இன்னத்துரை. பதினெட்டுப்பேர்கொண்ட செயற்குழு உறுப்பினர்கள்.

## சுத்தானந்த இந்துஇளைஞர்சங்கம்

[வவனியா]

வவனியா சுத்தானந்தஇந்து இளைஞர் சங்கத்தின் 24-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: த. நல்லதம்பி, உப தலைவர்கள்: கே. பரமலிங்கம், ஆர் வி. வில்வராசா, கா. ஜோதிலிங்கம், க. பாலசேகரம், பொதுச்செயலாளர்: ச. கந்தசாமி பொருளாளர். பே. சதாசிவம், உபசெயலாளர்: எம். தங்கராசா. உபபொருளாளர்: எஸ். நாகராசா. பத்துப்பேர் நிர்வாக உறுப்பினர்.





இத் தனிச் சிறப்புக்கள். இலங்கை அடங்கிலுமுள்ள. முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறுன்முதலீடு சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 17 1/2% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம்; | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு<br>6 வருடம் - 17 1/2% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

HPT GROUP

ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்,
HPT பில்டிங், கொழும்பு-8 த. பெ. இல 1077.
ரெலெக்ஸ்: 1203 கொழும்பு, போன்: 94356. 94320
கிளை அலுவலகங்கள்;
★ 2 - 8, நவீன சந்தை, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலை பேசி: 7698
8, புத்தளம் ரோட், குருணாகல். ★(RAVI)

"ம. கி. விவகாரம்:

# சமரஸப் பேச்சுவார்த்தை தொடர வேண்டும்"

## இஸ்ரேலியப் பிரதமர் விருப்பம்

டெல்அவிவ், மே 8

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக தமது நாட்டுக்கும் எகிப்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டுமென இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. பெகின் கூறியுள்ளார்.

அமெரிக்கா, சவூதி அரேபியாவுக்கு ஜெட் விமானங்கள் அனுப்புவதைக்கண்டித்த திரு. பெகின் இவ்விமானங்கள் அரபு நாடுகளுக்கு கொடுக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

பலஸ்தீனியர் சுதந்திர ராஜ்யம் அமைப்பதைத் தாம் கண்டிப்பதாகவும் அவர் வலியுறுத்தினர்.

அமெரிக்காவுக்கு இவர் கடந்த வாரம் விஜயம் செய்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ)

# பாக். பத்திரிகையாளர் 14 பேருக்குச் சிறை

லாகூர், மே 8

பாகிஸ்தான் இராணுவ அரசு விதித்த சட்டவிதிகளை மீறி உண்ணாவிரதம் இருத்தல் முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்ட 14 பத்திரிகையாளர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பிரஸ்தாப பத்திரிகையாளர்களுக்கு ஆறு மாதங்கள் முதல் 1 வருடச் சிறைவரை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோ சிறைவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையிலேயே இவர்களும் சிறைவைக்கப்பட்டுள்ளனர். (உ)

### கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி இளம் விவசாயிகள் கழகத்தினரால் நாளை புதன்கிழமை இரவு 'இலங்கையும் அதன் சுதந்திர வர்த்தகவலயமும்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

கழகத் தலைவர் திரு. ஆ. சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். வளாக விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தன் உரையாற்றுவார்.

### சாரணியத்தலைவர் தினம்

[யாழ்ப்பாணம்]

சாரணிய இயக்கத் தலைவர் தினம் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமாநில சாரணி ஆணையாளர் திருமதி ராசநாயகம் கலந்துகொண்டு மரியாதை அணிவகுப்பை ஏற்றுக் கொண்டார். உப அதிபர் திருமதி இராசரத்தினம் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

பகுதி ஆணையாளர் திருமதி பேராயிரவர் அகல்விளக்கு ஏற்றினார்.

சாரணி எஸ். தட்சாயினியின் பாசறைக்கு 1-ம் பரிசு கிடைத்தது. மத்தியஸ்தராக சாரணியஉதவி ஆணையாளர் செல்வி கங்களம் அருள்நந்தியும் பாசறை ஆணையாளர் திருமதி ஞான அருள்பிரகாசமும் கடமையாற்றினர். கல்லூரி சாரணியதலைவி செல்வி ராதா சோமசுந்திரம் நன்றியுரை கூறினார். [ச]

### செல்வாவின் பெயரால் அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வாவின் பெயரால் கண்டிவீதி பெரிய தெருச்சந்தியில் தமிழ் இளைஞர்கள் அன்னதானம் ஒன்றை அளித்தனர். யாழ் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வே. யோகேஸ்வரன் தலைமையில் நிகழ்ந்த இந்த அன்னதானத்தில் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் வாசுதேவன், சோமலிங்கம் சந்திரன், சுந்தரேஸ்வரன், சுந்தரலிங்கம் உட்பட பலர் இளைஞர்கள் கலந்து கொண்டனர் [கி-உ]

### சமய வகுப்பு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் யாமாச்சந்தி கலைமகள் சனசமூக நிலையத்தினர் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இலவச இந்து சமய வகுப்பினை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர். இதற்கான ஆரம்ப வைபவம் நிலையத்தலைவர் திரு. ஞா. வேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் இந்து சமய விருத்திச்சங்க செயலாளர் திரு. சு. கந்தசாமி நிலையப் போஷகர் திரு இரத்தினசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

மாணவர்களுக்கு கலைமகள் சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்பட்ட திருமுறை நூலும் வழங்கப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு

மருதர் கந்தர். கொக்குவில் கிழக்கு, கொக்குவில் — வழக்காளி

இல: சகு/257. — எதிராக

1. கணபதி நாகமுத்து,
2. நாகமுத்து செல்லையா,
3. நாகமுத்து இன்னராசா கொக்குவில் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் சகு/257-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 9-ம் திகதி (9-6-78) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தொகை

முதலும் வட்டியுமாக 2581/60 மேலும் 2400/- ரூபாவிற்கு 4-10-76 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் 12 வீத வட்டியும், செலவு 479/70 சதமும் (ஏற்பட்ட செலவு 288/50, நடக்கவேண்டிய செலவு 94/55, மேலதிக செலவு 96/65)

### ஆதன டாப்பு

வடமராணம் யாழ்ப்பாண சுவட்டமும் பகுதியும், நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை:-

(1) "ஆலைக்காடு" பர நில. லா 4 இதில் கிழக்குப்பக்கமாக நன்கொடை கொடுத்த நில. பர. 1 ஒன்றும் மேற்குப் பக்கமாக அறுதியாகவும் நன்கொடையாகவும் கொடுக்கப்பட்ட பரப்பு 2 நீக்கி மிகுதி நடுப்புறமாக நில. பர. 1 ஒன்றும் பயிர்களும் இதற்குள்ளடங்கிய கட்டிடங்களும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், இதற்கெல்லை கிழக்கு நாகமுத்து செல்லையாவினுதனம், வடக்கு செல்லப்பா ஆறுமுகத்தினுதனம், மேற்கு இராமு செல்லத்துரையினுதனம், தெற்கு காத்தி கந்தையாவினுதனம் இதடங்கலும், கிழக்கெல்லைக்காணியின் தெற்கெல்லைக்கருகாக கிழக்கு ரோட்டுக்குப் போக்குவரவு செய்யும் பாதைப்பாவிப்புரித்தும்.

(2) டிமேற்படி "ஆலைக்காடு" பர நில லா 4. இதில் தென்மேற்குப்பக்கமாக அறுதிவிற்ற நில பர. 1 நீக்கி மிகுதி நில. பர. மூன்றும் இதில் கிழக்குப்பக்கமாக பர. நில லா 1ம் அடையும், வீடும், கிணறும், இந்தப்பரப்பு ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு செல்லப்பா ஆறுமுகத்தினுதனம். மேற்கு நாகமுத்துவுக்கும் பெண் சின்னத்தங்கத்திற்குமுரிய ஆதனம், தெற்கு காத்தி கந்தையாவுக்குரியவாதனம், இதடங்கலும் கிணற்றிற்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், இவ்வாதனத்தின் தெற்கெல்லைஓரமாக மேற்கெல்லைக்காணிக்காரர் கிழக்கு ரோட்டுக்குப் போவதற்குரிய பாதைப் பாவிப்புரித்தும் நீங்கலாக.

டா. க. பொன்னுத்துரை (J P)

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

"அகிலகம்",
28/1, கச்சேரி,
யாழ்ப்பாணம் 18-4-78

9261

நமீபியப் பிரச்னை:

# நியுயோர்க்கில் ஐந்து நாடுகள் கூடி ஆராயவுள்ளன

நியுயோர்க், மே 8

நமீபியப் பிரச்னை குறித்து நியுயோர்க்கில் கூடி அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஆராயவிருக்கின்றன.

அங்கோலாவில் தென்னாபிரிக்கத் துருப்புகள் பிரவேசித்தது பற்றியும் இந்நாடுகள் ஆராயும்.

அங்கோலாவுக்குள் தென்னாபிரிக்கப்படைகள் நடவடிக்கை எடுத்ததை ஐ. நா. பாதுகாப்புச் சபை கண்டனம் செய்துள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற இத்தாக்குதலின் போது 600 பேர் கொல்லப்பட்டனர். 244 பேர் காயமடைந்தனர். (உ)

# ஆண்டு முடியும்வரை எண்ணெய் விலை உயராது!

லண்டன், மே 8

இவ்வாண்டு முடியும்வரை எண்ணெய் விலைகளை அதிகரிப்பதில்லை என்று ஒபெக் நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தநிறுவனத்தைச்சேர்ந்த 13 அமைச்சர்கள் சவூதி அரேபியாவில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தனர்.

தமது எதிர்காலத்திட்டங்கள் குறித்து ஆராயும் பொருட்டு 6 அங்கத்தவர்கள் கொண்டகுழு ஒன்றை ஒபெக் நிறுவனம் நியமித்துள்ளது.

## ஊர்காவற்றுறைப் பட்டினசபை

# கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் 29-5-78-ந் திகதி திங்கள் கிழமை நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் இக்கந்தோர் அலுவலக நேரங்களில் 15-5-78-ந் திகதி தொடக்கம் 26-5-78-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை இச்சபையின் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும்.

| வேலை விபரம் | கேள்விப் பிணைப்பணம் | பத்திரம் பணம் |
|---|---|---|
| 1. சேரி ஒழிப்பு வீடமைப்பு வீடுகள் 5 சோடி கட்டுதல் | 250.00 | 50.00 |
| 2. வேலணை வீதி, 2-ம் ஒழுங்கை திருத்த வேலை | 50.00 | 10.00 |
| 3. வேலணை வீதி 3-ம் ஒழுங்கை திருத்த வேலை | 50 00 | 10.00 |
| 4. சுருவில் 2ஆம் ஒழுங்கை திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 5. புளியடி ஒழுங்கை திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 6. உப்புக்குளம் ஒழுங்கை திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 7. சென் ஜேம்ஸ் ஒழுங்கை திருத்தவேலை | 50.00 | 10 00 |
| 8. நெச்சட்டா கடற்கரை வீதி திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 9. கதிரேசன் கோவில் வீதி திருத்தவேலை | 50 00 | 10.00 |
| 10. காம்ப் ரோட் ஒழுங்கை திருத்தவேலை | 25 00 | 10.00 |
| 11. அயித்தாம்புலம் வீதி திருத்தவேலை | 50 00 | 10.00 |
| 12. அயித்தாம்புலம் வீதி 2 ஆம் ஒழுங்கை திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 13. சண்முகநாதன் களிச்சாலம்பை வீதி திருத்தவேலை | 50 00 | 10.00 |
| 14. பாலாவி வீதி திருத்தவேலை | 50.00 | 10,00 |
| 15. பாலாவி வீதி ஒழுங்கை திருத்தவேலை | 25.00 | 10.00 |
| 16. மின்சார உப நிலைய வீதி திருத்தவேலை | 25.00 | 10.00 |
| 17. மண்குளி வீதி திருத்தவேலை | 50.00 | 10.00 |
| 18. பக்க அணைச்சுவர் (அக்கை தங்கை குளம்) கட்டுதல் | 50.00 | 10.00 |
| 19. பொது மலகூடங்கள் திருத்தவேலை | 25.00 | 10.00 |
| 20. இறுவர் திறந்தவெளி அரங்கிற்கு தீந்தை பூசுதல் | 25 00 | 10.00 |
| 21. விளம்பரப் பலகைக்கு எண்ணைத் தீந்தை சதுர அடிக்கு பூசி எழுத | 10.00 | 2.00 |

சேரி ஒழிப்பு வீடமைப்பு வீடுகள் கட்டும் வேலைக்கு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மட்டுமே கேள்விப்பத்திரம் விநியோகிக்கப்படும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் இக்கந்தோர் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்
எஸ். சி. பொன்கலன்,
விசேட ஆணையாளர்,
பட்டின சபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
5-5-78.

9260

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-45
ஜெமினி — தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ஜெய்சங்கர்-தேவிகா
நடித்த
அன்புச்சகோதரர்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

6-வது வெற்றி வாரம்
ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று
12-ம் திகதி முதல் சிவாஜி — மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

Regal (Jaffna) 3rd Crowded Week
Daily 4-45, 7-00 and 9-00 p.m.
TONY CURTIS ROGERMOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648
தினசரி 10-15, 2-15, 6-15 19 00
சிவாஜி... ஜமுனா... வீரப்பா... கண்ணாம்பா
மருதநாட்டு வீரன்
— புத்தம் புதிய பிரதி —
மே 13ந் திகதி முதல் காலை 8 30 மணிக்காட்சி மட்டும்
உலகப் புகழ்பெற்ற அதிசயமிகு சர்க்கஸ் காட்சிகளை
உங்கள் குழந்தைகளுடன் கண்டுகளியுங்கள்
CIRCUS Color

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், விஜயா, சோ
நடித்த
வாயாடி
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
சிவாஜி, பத்மினி
வியட்நாம் வீடு

வங்கிக் கொள்ளை வழக்கு:

# 10 வருட சிறையும் 100 ரூபா அபராதமும்

[கண்டி]

ரத்தோட்டை வங்கிக் கொள்ளை வழக்கில் எதிரிகளுக்கு தலா 10 வருட சிறைத் தண்டனையும் 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு கண்டிமேல் நீதிமன்றத்தில் திரு. ஏ. எஸ். எம் செனிவிரத்தின முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

16 நாட்கள் நடந்த விசாரணையின் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் 76ம் ஆண்டு டிசம்பர் 10ம் தேதி காரி ஒன்றைக் கடத்தியதாகவும் ரத்தோட்டை வங்கிக் கிளையில் 11,381 ரூபாவை வங்கி மனேசர் செல்வி கமலாகுமாரி காமினிடம் இருந்து கொள்ளையடித்ததாக சிறில் திஸநாயக்கா, கே. சமரநாயக்கா, ஜி. யுயம், எச். செனிவரத்தின ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது 1ம் எதிரியும் 4ம் எதிரியும் 71ம் ஆண்டு கிளர்ச்சி சம்பவத்தில் தொடர்புள்ளவர்களென்றும் பின் அனுராதபுரம் சிறைச்சாலையை உடைத்து மறுஇரு என்றழைக்கப்படும் இறியகாவுடன் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3ம் எதிரியான யம் என்பவர் மாத்தளையிலுள்ள பரீட்சை நிலையமொன்றில் 2ம் எதிரிக்கு பதிலாக ஆள்மாறாட்டம் செய்து ஜி. இ. ஈ. பரீட்சை எழுதிக் கொண்டிருந்த சமயம் இவ்வழக்கு தொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காரிகடத்திய குற்றச் சாட்டில் 2ம் எதிரி விடுதலை செய்யப்பட்டபோதிலும் வங்கி கொள்ளைவழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

## ஜீப், லொறி பெருமளவில் இறக்குமதி

[கொழும்பு]

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 150 லொறிகளும் 252 ஜீப்புகளும் கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

அண்மைக்காலத்தில் லொறிகளுக்கு நாட்டில் ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து லொறிக்குஏற்பட்டுள்ள பெரும் கிராக்கியைச் சமாளிக்கவே இந்த லொறிகளை தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்யவுள்ளன.

இதேவேளையில் அரசாங்கம் 252 "மிட்சுபிஷி" ஜீப்புகளை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. [இ]

"ஏன்ஏசினீர்?"

## இக்கேள்விக்குபதில் இரும்புக் கம்பியால் கிடைத்ததாம்

[நெல்லியடி]

இரும்புக்கம்பியால் தாக்கப்பட்ட தந்தையும் தனையனும் இரத்தம் பெருகிய நிலையில், மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

கரவெட்டியில் வசிக்கும் பிலிப்புப்பிள்ளை பொன்னுத்துரையும் அவரது மகனுமே மேற்படி இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டவராவார். உறவினர் ஒருவரே இவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எம். நாகரட்ணம் பொன்னுத்துரையின் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார். அரியரட்ணம் ஆபிரகாம்லிங்கம் என்பவர் எனது வீட்டிற்கு மதுபோதையில் வந்து, என்னை ஏசினார். ஏன் இப்படி ஏசினீர் என்று கேட்க இரும்புக்கம்பியால் தலையிலும் தோள் மூட்டிலும் கன்னத்திலும் அடித்தார் எனது மகன் பற்றிக்[குணம்] வந்தபோது அவருக்கும் கம்பியால் அடித்தார் என்று பொன்னுத்துரை வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளாராம்.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர். [உ]

## கடைச் சிப்பந்திகளிடம் அதிக வேலைவாங்குகிறார்களாம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள கடைச்சிப்பந்திகள் தினமும் 12 மணித்தியாலம் வேலை செய்வதாகவும், இதுபற்றி நடவடிக்கைஎடுக்குமாறும் சிப்பந்திகள் குழு ஒன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார்செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

தனிப்பட்ட வர்த்தகர்கள், விடுமுறை நாட்களிலும் தங்களை வேலைசெய்யும்படி நிர்ப்பந்திப்பதாகவும், விடுமுறை நாட்களில் ஒற்றைக் கதவில் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்வதாகவும் இக்குழுவினர் புகாரில் தெரிவித்துள்ளனர்.

கடைகளில் வேலைசெய்யும் பெண்சிப்பந்திகளைக்கூட இரவு 7 மணி வரை வேலைசெய்யுமாறு கட்டாயப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

12 மணித்தியாலம் வேலை செய்வதற்கும் மிகவும் குறைந்த சம்பளமே வழங்குவதாகவும். இதனால் சில சிப்பந்திகள் சில மாதங்களுக்குள்ளேயே வேலையை விட்டுச் செல்ல விளம்பரம் செய்து புதிய சிப்பந்திகளை வேலைக்கு அமர்த்துவதாகவும், அப்புகாரில் தெரிவித்துள்ளனர்.

மாதச்சம்பளத்தில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு விடுமுறைதினங்களில் வேலைசெய்வதற்கு மேலதிக பணம் வழங்கப்படுவதில்லையென்றும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பலதடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாகவும் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இந்தப் புகார்பற்றி அதிகாரிகள் அசட்டையாக இருப்பதாக அவர்கள் கவலைதெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரியை நேரில் சந்தித்துத் தங்கள் கஷ்டத்தைத் தெரிவிக்கவிருப்பதாகவும் அவர் கூறினார். [க]

## எழுபதாவது வயதில் ஏற்பட்ட விரக்தி தற்கொலையில் முடிந்தது

(மாவிட்டபுரம்)

வாழ்க்கையில் விரக்தியுற்ற வயோதிபர் ஒருவர் நஞ்சிட்டுத் தற்கொலை செய்தார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த கறுவல் வயிரவன் (70 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தியசமயம், காலமானவர் தமது மகனுடன்வசித்துவந்ததாகவும், மகன் தம்மைப் பராமரிப்பது சரியில்லையெனக்கூறி தனிமையாக வாழ முற்பட்ட இவர், தனிமையாக வாழமுடியாமையினால் நஞ்சருந்தப்போவதாக கூறிவந்ததாகவும், வாழ்க்கையில் விரக்தியுற்ற நிலையில் இருந்த இவர், நஞ்சருந்தி மரணத்தை தழுவியதாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன. தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

மனைவி, பிள்ளைகள் பிரிவு:

## குடும்பஸ்தர் விஷமருந்தி வாழ்வை முடித்தார்

(மாவிட்டபுரம்)

மனைவி பிள்ளைகளது பிரிவைத் தாங்கமுடியாத நபர் ஒருவர் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார்.

சேந்தாங்குளத்தைச் சேர்ந்த மடத்தின் குழைமுத்து [55 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம் மரணம் குறித்து விசாரணை நடத்திய சமயம் காலமானவர் அடிக்கடி மது வெறியில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டைபிடிப்பாரெனவும் அவரது கொடுமை தாங்கமுடியாது மனைவியும் பிள்ளைகளும் அவரை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்தமையால் மனமுடைந்து திரிந்த காலமானவர் சம்பவதினம் மனைவியிடம் சென்று தகராறுபட்டதையடுத்து திரும்பிச் சென்று நஞ்சருந்தியதாக தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது. காங்கேசன்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். [இ-உ]

### வசூலிக்க...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கடன் தொகை இயக்குநர் சபையினது அங்கீகாரமின்றி இச்சங்கத்தின்முன்னாள் தலைவரான திரு. ஆ. தியாகராசாவின் கடிதப்படியே கொடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. [க]

Rio (Jaffna) Daily 4 Shows
Killers Are Challenged

## கடலில் மூழ்கி மரணம்

(அழுத்கம)

கொழும்பைச் சேர்ந்த 25 வயது வாலிபர் ஒருவர் அழுத்கம கடலில் மூழ்கி மரணமானார்.

நீச்சலுடையுடன் கடலில் விழுந்த இவரது உடல் இதுவரை மீட்கப்படவில்லை.

(உ)

# கலவரத்தில் கொலையுண்ட நல்லலிங்கத்துக்கு அஞ்சலி

[மண்டைதீவு]

அண்மையில் நடந்த கலவரத்தின் போது வவனிக்குளத்தில் கொலையுண்ட மண்டைதீவைச் சேர்ந்த செல்லர் நல்லலிங்கத்துக்கு மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையம் அனுதாபம் தெரிவித்தது.

மண்டைதீவு - திருப்புலம் மைதானத்தில் நடந்த மேற்படி நிலையத்தின் நாடகவிழாவிலேயே இவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேற்படி நிலையத்தைச் சேர்ந்த திரு. வி. சோமசுந்தரம் தமது அஞ்சலி உரையில் கூறியதாவது:

அமரர் நல்லலிங்கம் மேற்படி சனசமூக நிலையத்தின் ஆரம்ப இயக்குநராக இருந்து இக்கிராமத்திற்கும் இந்நிலையத்துக்கும் அறிவுத்துறையில் சேவையாற்றியவர். தமிழரசுக்கட்சியில் திருமலை பாதயாத்திரை சத்தியாக்கிரகம் போன்ற இயக்கங்களில் முன்னணியில் நின்று உழைத்ததை எவரும் மறக்கமுடியாது.

இக்கிராமதில் அறிஞர் அண்ணாவின் கருத்துக்களை வளர்த்து வந்த திரு. நல்லலிங்கம் இளைஞர்களால் அண்ணா என்று அழைக்கப்பட்டுவந்தார்.

1961-ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது நடத்தப்பட்ட சட்டமறுப்பு தபால் நிலையத்திற்கு இவர் தபால் விநியோகஸ்தராக பணியாற்றியவர்.

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம் டிப்போவைச்சேர்ந்த பஸ் கண்டக்டர் திரு. யேசுதாசனுக்கும் இவ்விழாவில் பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டது.

மண்டைதீவு பஸ் சேவையில் கடந்த பல மாதங்கள் சேவையாற்றிவரும் திரு. யேசுதாசன் சிறந்த நடத்துநராகவும் கடமையுணர்ச்சியும் நிறைந்த சேவையுணர்ச்சியுடனும் பிரயாணிகளிடத்தில் பண்புடனும் சேவையாற்றி வருபவர் என்று இவ்விழாவில் பாராட்டுரைகளும் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்திற்கு மண்டைதீவுக்கிராமத்தின் இளைப்பாறியகிராமத் தலைவர் திரு. மு. நவரத்தினராசா தலைமை தாங்கினார். மேற்படி நிலையத் தலைவர் திரு. ச. இரத்தின குமார் முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை நிலையஉறுப்பினர் வீ. சோமசுந்தரம் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்.

நிலையத்தலைவரால் சிறந்த நடத்துநர் என்ற பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. கடந்த இனக்கலவரத்தின் போது கடமைக்கு வந்த நேரம் பொலிசாரினால் காயப்படுத்தப்பட்டு குளத்தில் வீசப்பட்டவர் திரு. யேசுதாசன் என்பது குறிப்பிடப்பட்டது. [இ]

## யாருடையது?

யாழ். பஸ் நிலையத்தில் சாந்தி இராசையா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட பெண்மணி ஒருவரின் பாஸ்போர்ட் அளவு படங்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

0 0 0

நவாலியைச் சேர்ந்த செ. அருணேசன் என்பவரால் வெள்ளாந்தெரு சந்தியில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் அடிக்கட்டைகள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

......

## பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு முடிமன்னர். ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை புதன்கிழமை இரவு நடைபெறவிருக்கிறது.

......

## கண்ணாடி இலவசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகம் வசதி குறைந்த மக்களுக்கு மூக்குக் கண்ணாடி, கண்ணாடி பிறேம்கள், செவிப்புலன் உதவிக் கருவி, பொய்க்கால் ஆகியவற்றை இலவசமாக வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் செவிப்புலன் உதவிகருவியைப்பெற விரும்புவோர் கொழும்பு ஆஸ்பத்திரிலேயே தமது காதைப் பரிசோதித்து வைத்திய பத்திரங்களைப் பெறவேண்டியுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் இதற்கான கருவிகள் இல்லாததினாலேயே இவர்கள் கொழும்பு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

மூக்குக் கண்ணாடி, பொய்க்கால் ஆகியவற்றைப் பெற விரும்புபவர்களும் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களுடன் திரு. இமானுவல் ஆர். ஜோசப், காரியதரிசி யாழ். லயன்ஸ் கழகம், 484 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். (இ)

திருவள்ளுவர்

## மகாசபை மகாநாடு

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் மகாசபையின் வருடாந்த மகாநாடு ஜூன் மாதம் 10-ந் திகதி உடுவில் மல்வத்தில் நடைபெறவிருக்கிறது.

மகாசபைத் தலைவர் திரு. க. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்கள் கொண்டுவரப்படவிருப்பதாக செயலாளர் திரு எஸ். திலகநாதன் தெரிவித்துள்ளார்.

இம்மகாநாட்டில் வடபகுதியிலுள்ள அரசியல் பிரமுகர்கள் உட்படப் பலர் உரையாற்றுவர்.

## பேச்சுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு பெண்கள்: செல்வி இ. பாக்கியவதனி, செல்வி வே சுகந்தினி, செல்விகள் சி. மஞ்சுளா, ச. சந்திகலா.

கீழ்ப்பிரிவு ஆண்கள்: செல்வர் இ. திருக்குமார், மு. நித்தியலிங்கம், செல்வன் ச. சர்வேஸ்வரன், செல்வன் கு. கமலராசன்.

மத்திய பிரிவு பெண்கள்: செல்வி வே. சுமதி, செல்வி இ ஞானசவுந்தரி, செல்வி வே. சாந்தகுமாரி.

மத்திய பிரிவு ஆண்கள்; செல்வன்: க. நிர்மலானந்தன் செல்வன் க. சங்கரபாலன்.

# வவனியாவில் நிலைமை வழமையானது

## ஆயுதம் தரித்த பொலிசார் காவலில்

(வவனியா)

வவனியா பஜாரிலுள்ள இறீம் ஹவுஸ் கடையொன்றும், இதற்கு அருகேயுள்ள கடையொன்றும் இனம் தெரியாத சிலரால் அடித்து நொருக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் ஏற்பட்ட பதட்டநிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இப்பொழுது இங்கு நிலைமை பழைய நிலைக்கு திரும்பியுள்ளது.

நகரின் பல பகுதிகளிலும், ஆயுதம்தாங்கிய பொலிஸார் காவலில் உள்ளனர். முக்கிய நடை பாதைகளில், வியாபாரம் செய்த சகல நடைபாதை வியாபாரிகளும் அகற்றப்பட்டுள்ளனர்.

சகல கடைகளும் பாதுகாப்புக் கருதி இரவு 9 மணிக்கு மூடப்பட்டு வருகின்றன. இரவு வேளைகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகவே உள்ளது.

சம்பவம் நடைபெற்ற உடனேயே துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து, பொதுமக்கள் வவனியா பொலிஸ் அதிபர் திரு சந்திரா மெண்டிஸை பாராட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## கொள்ளை

[வெலிக்கடை]

வெலிக்கடையில் உள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு 10,000 பெறுமதியான நகைகள், சேலைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. [உ]

## ஆங்கில அறிவை வளர்க்க முன்வரும் கல்வி நிலையம்

(யாழ்ப்பாணம்)

''ஆங்கிலம் இலகுவிற்கற்று அழகாகப் பேசப்பழகுவதற்கு குழந்தைகள் முதல்முதியோர் வரை யாவருக்கும், உதவமுன்வந்துள்ளோம். முக்கியமாக, வெளிநாடுகளில், வேலைவாய்ப்பு பெறுவோருக்கு சமூதாயப் பணிபுரிய இக்கல்வி நிலையம் முன்வந்துள்ளது''.

யாழ். ராசையா செட்டியார் ஒழுங்கையில், புதியகல்வி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசிய வண பிதா ஜே எஸ். ஜே. வட்கிலேத் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். கல்விநிலைய கட்டடத்தில் நடந்த இத் திறப்பு விழாவில் அவர் மேலும் பேசுகையில், சில வாரங்களில் இந்நிலையம் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்படும் என்றும் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. என். தனபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். பாடசாலை பிரவேசம், ஜூன் 5ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது (க)

லொறிச் சட்டம் கொள்முதல்

# வடக்கு முன்னணி வகிக்கிறது

[யாழ்ப்பாணம்]

வாகனங்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டை அரசாங்கம் தளர்த்தியதைத் தொடர்ந்து வடபகுதியிலிருந்து மட்டும் இதுவரை 560 லொறி அடிச் சட்டங்களை [சேஸி] கொள்முதல்செய்ய தனியார்துறையினர் பணம் செலுத்தியுள்ளனர்.

இவற்றில் 60 லொறிகள் ஏற்கனவே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 100க்கும் அதிகமான லொறிகள் தயார் நிலையில்உள்ளன. மிகுதி இறக்குமதியாவதில், தாமதம் ஏற்பட்டுள்ளது.

லொறிச் சட்டங்களை கொள்முதல் செய்வதில் மற்றைய மாவட்டங்களிலும் பார்க்க வடபகுதியேமுன்னணியிலிருப்பதாகத் தெரியவருகிறது. [செ]

## கதறியழுத காட்சி

(யாழ்ப்பாணம்)

"எங்களை விட்டு எங்கே செல்கிறீர்கள்... ஐயோ, அப்பா திரும்பி வரமாட்டீர்களா... ஐயோ ஐயோ...'' என்று மனைவியும் பிள்ளைகளும் உற்றார் உறவினர்களும் கதறியழ, கூடிநின்றவர்கள் கண்ணீர் விட, இறுதிக்கிரியைகளுக்காக பத்மநாதனின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து மயானத்திற்கு நேற்று மாலை எடுத்துச் செல்லப்பட்டது.

மயானத்திற்கு கொண்டு வரப்பட்டு இறுதிக் கிரியைகள் பூர்த்தி செய்யப்பட்டதும். பொலிஸ் பகுதியினர் தமது இறுதி மரியாதையைச் செலுத்தி 21 குண்டுகள் தீர்க்கப்பட்டன.

பத்மநாதனின் மூத்த புதல்வன் செல்வன் சங்கர் (வயது 14) தனது தந்தையின் சிதைக்குத் தீ மூட்டினார். [கா]

# 30 லட்சம் மீன்ரின் இறக்குமதியாகும்

(கொழும்பு)

வர்த்தக அமைச்சு உடனடியாக 30 லட்சம் மீன் ரின்களை இறக்குமதி செய்யவிருக்கிறது.

அடுத்த சில வாரங்களில் 20 லட்சம் மீன்ரின் இறக்குமதியாகும்.

க. மொ. விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதி செய்துள்ள 15 அவுன்ஸ் மீன்ரின்கள் தற்போது சில்லறைக் கடைகள் மூலமாக 7 ரூபா வீதம் விற்பனையாகின்றன. (உ)

## ரூ. 50,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவனிக்குளத்தில் வைத்து கைதுசெய்தனர். விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து தன்னை இம்சித்ததாகவும், தன்னைக்காபாவிக்கமுடியாத நிலைக்கு தாக்கியிருப்பதாகவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து முன்னர் மூல்லைத்தீவு எம். பி. திரு எக்ஸ். எம். செல்லத்தம்பு தேசிய அரசப் பேரவையில் கிளப்பியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. (செ)

## பொலிஸ்அதிபர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதி பரிசு வழங்கப்பட்டது. 77ம்ஆண்டு இவர் காங்கேசன்துறை பொலிஸ்நிலையபொறுப்பதிகாரியாக இருந்தபோது. ஆகஸ்ட் கலவரத்தின்போது அவரது காருக்கு குண்டுவீசப்பட்டது.

## கைரேகை நிபுணர்கள் வருகை

இன்ஸ்பெக்டரி பத்மநாதன் கொலை தொடர்பாக பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். திருநெல்வேலியில் அவரது இல்லத்தில் இருந்த கார்- சம்பவம் நடந்த போது இருந்த இடத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வந்த கைரேகை நிபுணர்கள் நேற்று படம்பிடித்தார்கள்.

படமாளிகைமுன்

## கைகலப்பில் இருவர் பலி!

சென்னை, மே. 8

சென்னை நகரிலுள்ள ஒரு திரைப்பட மாளிகை முன்பாக ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இருவர் இன்று பலியானார்கள். கடுமையாகக் காயமுற்ற மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இந்தத் தியேட்டரில், புதியபடம் வெளியானதைத் தொடர்ந்து டிக்கட் பெறுவதில் இருகோஷ்டிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது என்றும், இது பின்னர் கத்திக்குத்தில் முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இறுதி மரியாதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கோப்பாய், காங்கேசன்துறை, சுன்னாகம், குருநகர், சங்கானை ஆகிய பொலிஸ் நிலையங்களின் சார்பில் 750-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். (கா)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை நாராயணபிள்ளை

பருத்தித்துறை வி. எம். வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் கிருஷ்ணபிள்ளை நாராயணபிள்ளை காலமாகிவிட்டார் இவர் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், இராசம்மா, இராசையா, இராசரத்தினம், நடராசா ஆகியோரின் சகோதரரும், முருகப்பாவின் மைத்துனருமாவார். அன்னாரது தகனக்கிரியைகள் இன்று (9 5 78) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு பருத்தித்துறை பொது மயானத்தில் நடைபெறும்.

9267

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கிதாபனத்தார் யாழ்ப்பாணம் இவன்சேசில் வெம்லீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eelanaadu" Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka